# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம், பேர்ன்பேட்டை, (Pension Pay Office பின்புறம்)

நந்தனம், சென்னை – 600 035. தொலைபேசி எண்.044-29515590

**ஆணை நாள் 05.10.2026**

**முன்னிலை**

**திரு அபய் குமார் சிங், இ.கா.ப. (ஓய்வு)**
**மாநில தகவல் ஆணையர்**

•••••

**வழக்கு எண். SA 14945/E/2024**

திருமதி.எம்.ஜெயந்தி .. மேல்முறையீட்டாளர்

*/எதிர்/*

பொதுத் தகவல் அலுவலர்/ வருவாய் கோட்டாட்சியரின் நேர்முக உதவியாளர், வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம், தென் சென்னை கோட்டம், கிண்டி, சென்னை-600 032. — பொது அதிகார அமைப்பு

******

**ஆணை**

இவ்வாணையத்தின் 15.09.2026 நாளிட்ட உத்தரவை தொடர்ந்து, திரு.பாலாஜி பாரதி, பொதுத் தகவல் அலுவலர் மற்றும் வருவாய் கோட்டாட்சியரின் நேர்முக உதவியாளர், தென் சென்னை வருவாய் கோட்டம், கிண்டி, சென்னை- 600 032 அவர்கள் மற்றும் திருமதி.சி.வனிதா, அப்போதைய பொதுத் தகவல் அலுவலர் மற்றும் வருவாய் கோட்டாட்சியரின் நேர்முக உதவியாளர், தென் சென்னை வருவாய் கோட்டம், கிண்டி, சென்னை- 600 032 (தற்போது) தனி வட்டாட்சியர் (நி.எ.) நெடுஞ்சாலைகள், கிண்டி, சென்னை அவர்களும் இவ்வாணையத்தில் 05.10.2026 அன்று நேரில் ஆஜராகி விளக்கக் கடிதங்களை ஆணையத்தில் சமர்ப்பித்தனர்.

**இவ்வாணையத்தில் 15.09.2026 அன்று விசாரணைக்கு எடுத்துக் கொண்டு கீழ்க்கண்ட உத்திரவுகள் பிறப்பிக்கப்பட்டன.**

5)

i. மனுதாரர் தகவல் அறியும் உரிமைச் சட்டம், 2005 பிரிவு 6(1)-ன் கீழ் அனுப்பிய மனுவில் கோரியுள்ள தகவல்களை முழுமையாக மனுதாரருக்கு தகவல் அறியும் உரிமைச் சட்டப்பிரிவு 7(6)ன்படி கட்டணமின்றி ஒப்புகை

அட்டையுடன் கூடிய பதிவஞ்சலில் ஒரு வார காலத்திற்குள் அனுப்பி வைத்து, அவர் அதனை பெற்று ஏற்பளிப்பு செய்த ஒப்புகை அட்டையின் நகல் மற்றும் வழங்கப்பட்ட தகவலின் நகலை இணைத்து ஒரு அறிக்கையாக இவ்வாணையத்தின் முன்பாக **05.10.2026 அன்று நேரில் சமர்ப்பிக்க வேண்டுமென தற்போதைய பொதுத் தகவல் அலுவலருக்கு இவ்வாணையம் உத்தரவிடுகிறது.**

ii. மேலும், இவ்வழக்கில் மனுதாரரின் 27.07.2024 தேதியிட்ட சட்டப் பிரிவு 6(1) மனுவினை பெற்றுக்கொண்டு 30 தினங்களுக்குள் தகவல்கள் அளிக்கத் தவறிய அப்போதைய பொதுத் தகவல் அலுவலர் மீது தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005 பிரிவு 20(1) மற்றும் 20(2)-ன் கீழ் ஏன் நடவடிக்கை எடுக்கக்கூடாது என்பதற்கான எழுத்து மூலமான விளக்கத்தை **05.10.2026 அன்று இவ்வாணையத்தில் நேரடியாக சமர்ப்பிக்க அப்போதைய பொதுத் தகவல் அலுவலருக்கு இவ்வாணையம் உத்தரவிடப்படுகிறது**.

**iii.** மேலும் மனுதாரர் 20.09.2024 நாளிட்டு அனுப்பிய முதல் மேல் முறையீட்டு மனுவிற்கு உரிய காலத்தில் தகவல் வழங்கத் தவறிய அப்போதைய முதல் மேல் முறையீட்டு அலுவலர் மீது, தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005 பிரிவு 20(2)-ன் கீழ் ஏன் நடவடிக்கை எடுக்கக் கூடாது என்பதற்கான எழுத்துப் பூர்வமான விளக்கத்தினையும் பெற்று, அதனை ஓர் அறிக்கையாக தயார் செய்து **அவ்வறிக்கையினை 05.10.2026 அன்று இவ்வாணையத்தில் நேரில் சமர்ப்பிக்க தற்போதைய பொதுத் தகவல் அலுவலருக்கு உத்தரவிடப்படுகிறது.**

**மேற்கண்ட ஆணை தொடர்பாக தற்போதைய பொதுத் தகவல் அலுவலர் மற்றும் முன்னாள் பொதுத் தகவல் அலுவலர் மற்றும் மேல் முறையீட்டு அலுவலரின் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது.**

பத்தி 5(i) இல் பிறப்பிக்கப்பட்ட இவ்வாணைய உத்திரவிற்கு இணங்க வருவாய் கோட்டாட்சியர், தென் சென்னை வருவாய் கோட்டம், ந.க.எண்.அ2/5000/2026, 30.09.2026 நாளிட்ட கடிதம் வாயிலாக மனுதாரருக்கு தகவல்கள் கட்டணமின்றி அனுப்பி வைத்து, வழங்கப்பட்ட தகவலின் நகலை 06.10.2026 **அன்று இவ்வாணையத்தில் நேரில் ஆஜராகி சமர்ப்பித்ததை இவ்வாணையம் ஏற்கிறது**.

பத்தி 5(ii) இல் பிறப்பிக்கப்பட்ட இவ்வாணைய உத்திரவிற்கு இணங்க திருமதி.சி.வனிதா, அப்போதைய பொதுத் தகவல் அலுவலர் மற்றும் வருவாய் கோட்டாட்சியரின் நேர்முக உதவியாளர், தென் சென்னை வருவாய் கோட்டம், கிண்டி, சென்னை- 600 032 (தற்போது) தனி வட்டாட்சியர் (நி.எ.) நெடுஞ்சாலைகள், கிண்டி, சென்னை அவர்களின் 05.10.2026 நாளிட்ட கடிதம் வாயிலாக திருமதி.எம்.ஜெயந்தி அவர்களின் 6(1) கீழ் பெறப்பட்ட மனுவிற்கு அக்காலக்கட்டத்தில் நீதி மன்ற வழக்குகள் அதிகமாக இருந்ததாலும், பணிச்சுமை அதிகமாக இருந்ததாலும் பெறப்பட்ட தகவல் அறியும் உரிமை சட்ட மனுக்கள் மீது உடனடியாக நடவடிக்கை எடுக்க இயலாத நிலை இருந்தது எனவும், மேற்படி பொருள் தொடர்பாக மனுதாரருக்கு 01.12.2025 அன்று இடைக்கால பதில் அளிக்கப்பட்டது எனவும் தெரிவித்து ஒரு விளக்கக் கடிதத்தினையும்

**இவ்வாணையத்தில்** 05.10.2026 **நேரில் சமர்ப்பித்தது. இவ்வாணையத்தில் சமர்ப்பிக்கப்பட்ட முன்னாள் பொதுத் தகவல் அலுவலரின் விளக்கக் கடிதத்தினை ஆணையம் ஏற்கவில்லை. இன்றைய ஆவண பரிசீலனையின் முடிவில் கீழ்க்கண்ட ஆணை பிறப்பிக்கப்படுகிறது.**

- மனுதாரரின் தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005, பிரிவு 6(1) ன் கீழ் தாக்கல் செய்துள்ள மனுவில் மனதாரர் கோரியுள்ள தகவலை உரிய காலத்தில் வழங்காத திருமதி.சி.வனிதா, தனிவட்டாட்சியர் (நி.எ.) நெடுஞ்சாலைகள், கிண்டி, சென்னை - 600 025 அப்போதைய பொதுத் தகவல் அலுவலர் அவர்களுக்கு தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005, சட்ட பிரிவு 20(1) ன் கீழ் அபராதம் ரூ.2000/- (ரூபாய் இரண்டாயிரம் மட்டும்) விதிக்கப்படுகிறது. அதனை அரசு கணக்குத் தலைப்பில் செலுத்திவிட்டு அது குறித்த அறிக்கையினை அப்போதைய பொதுத் தகவல் அலுவலரிடமிருந்து பெற்று தற்போதைய பொதுத் தகவல் அலுவலர் அவர்கள் 26.10.2026 அன்று ஆணையத்தில் நேரில் ஆஜராகி சமர்ப்பிக்குமாறு ஆணையிடுகிறது.

பத்தி 5(iii) இல் பிறப்பிக்கப்பட்ட இவ்வாணைய உத்திரவிற்கு இணங்க இவ்வாணையத்தில் தற்போதைய பொதுத் தகவல் அலுவலர் வாயிலாக 05.10.2026 அன்று நேரில் திரு.பெ.பாபு, மாவட்ட வருவாய் அலுவலர் மற்றும் தலைமை நிருவாக அலுவலர், தமிழ்நாடு வன்னியகுல சத்திரிய பொது அறநிலை பொறுப்பாட்சிகள் மற்றும் நிலைக் கொடைகள் வாரியம், TABCEDCO கட்டடம், 1/1இ, மேயர் இராமநாதன் சாலை (கிழக்கு), எழும்பூர், சென்னை - 600 008 (தற்போது பணிபுரியும் இடம்) அவர்களின் 05.10.2026 நாளிட்ட கடிதம் வாயிலாக 19(1) கீழ் பெறப்பட்ட மனுவிற்கு 30 நாட்களில் தகவல் அளிக்காததற்கு அக்காலகட்டத்தில் அதிகமான நீதிமன்ற வழக்குகள் மற்றும் பணிச்சுமை காரணமாகவும், அலுவலகத்தில் ஊழியர்களின் பற்றாக்குறை காரணமாகவும் மேற்படி மனுதாரரின் முதல் மேல்முறையீட்டு மனுவிற்கு தகவல் வழங்க இயலவில்லை எனத் தெரிவித்து அப்போதைய முதல் மேல்முறையீட்டு அலுவலர் அவர்கள் விளக்கத்தினை **இவ்வாணையம் ஏற்று மேல் நடவடிக்கையினை கைவிடுகிறது.**

**ஓம்/-(அபய் குமார் சிங்)**
**மாநில தகவல் ஆணையர்**

**//ஆணையத்தின் ஆணைப்படி//**

**உதவிப் பதிவாளர்**

**வழக்கு எண்**. SA 14945/E/2024
பொது அதிகார அமைப்பு

பொதுத் தகவல் அலுவலர்/
வருவாய் கோட்டாட்சியரின் நேர்முக உதவியாளர்
வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம்,
தென் சென்னை கோட்டம், கிண்டி,
சென்னை-600 032.

முன்னாள் பொதுத் தகவல் அலுவலர்/
வருவாய் கோட்டாட்சியரின் நேர்முக உதவியாளர், **(27.07.2024 தேதிய)**
வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம்
தென் சென்னை கோட்டம், கிண்டி,
சென்னை-600 032. (தற்போதைய பொதுத் தகவல் அலுவலர் வாயிலாக)

முதல் மேல் முறையீட்டு அலுவலர் / **(20.09.2024 தேதிய)**
வருவாய் கோட்டாட்சியர்,
வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம்,
தென் சென்னை கோட்டம், கிண்டி,
சென்னை-600 032. (தற்போதைய பொதுத் தகவல் அலுவலர் வாயிலாக)

**மேல்முறையீட்டாளர்**
திருமதி.எம்.ஜெயந்தி.
11/436, ஆதித்யா பிளாட்ஸ்,
ஸ்ரீதேவி கருமாரியம்மன் நகர்
4வது தெரு, இவிபி பிரவு அவின்யூ, அய்யப்பன்தாங்கல்,
சென்னை – 600 122.

Copy to: File AMD/PS